Thiru C. V. RAJAGOPAL : The question which I wanted to put has already been answered.

Mr. CHAIRMAN : Then the hon. Member should have withdrawn his request. Why should the hon. Member raise his hand?

Prosperity Brigade Scheme.

*156 *Q.* Thiru L. BALARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount allotted District-wise, under the Prosperity Brigade Scheme during 1972-73 and 1973-74?

சீரணி திட்டம்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1972–73, 1973–74–ஆம் ஆண்டுகளில் சீரணி திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது எந்த அடிப்படையில் மாவட்ட வாரியாக ஒதுக்கப்படுகிறது ?

இந்த ஒதுக்கப்பட்ட தொகை சீரான முறையில் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசீலிக்கப்பட்டதா ? சில மாவட்டங்களில் நல்ல முறையில் செலவழிக்கப்படவில்லையென்று புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சம்பந்தப்பட்ட இலாகாவைச் சேர்ந்தவர்களும் அனுப்புகின்ற விவரக் குறிப்புகளை வைத்துக்கொண்டு இந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. இந்தப் பணம் சரியாக ஒதுக்கப்படுகிறதா என்பது பற்றி கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, சில மாவட்டங்களில் ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவழிக்கப்படவில்லையென்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ? அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது என்று நான் அறிய விரும்புகிறேன்.

@ 409 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 4·20)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் வரவில்லை. ஆனால் அதிகமாகப் பணம் தேவை என்று தான் பல மாவட்டங்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, எங்கள் மாவட்டத்தில் கூட மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் முறையாகச் செலவழிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. அங்கே அது பற்றி நடவடிக்கை எடுப்பதாகக் கூறியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்ற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அது குறித்து அரசு என்ன கருதுகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து அரசுக்கு எந்த விதமான முறையீடுகளும் வரவில்லை.

Candidates allotted to the Board of Revenue (Land Revenue).

*157 *Q.* THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 16, on the floor of the Council on 16—12—1974—

(*a*) whether the Government are aware of the fact that some of the candidates recruited through Group IV Services during the year 1973 and allotted to the Board of Revenue (Land Revenue) during the years 1973 and 1974 by the Tamil Nadu Public Service Commission have been retrenched from service;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether the Government propose to re-employ them in the Board of Revenue (Land Revenue) or request the Tamil Nadu Public Service Commission to re-allot them elsewhere?

வருவாய் (நில வருவாய்) வாரியத்திற்கு
ஒதுக்கீடு பெற்றவர்கள்.

திரு. செ. முத்துசாமி : 16—12—1974-ல் சட்டமன்ற மேலவையில் வினா எண் 16-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில ளிக்க வேண்டுகிறேன்: